## சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - இட ஒதுக்கீடு அரசுத் துறை மற்றும் அரசு சார் நிறுவனங்கள் / நியமனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு விதிகள் கடைபிடிக்கப்படுதல் மற்றும் ஒதுக்கீடு இருந்தும் நிரப்பப்படாது உள்ள பணியிடங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமனத்தை உறுதி செய்தல் / மாநில அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்படுகிறது / ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை (நிலை) எண்.156
நாள் : 13-09-1997

ஆணை :

அரசுப் பணிகளில் உள்ள பல்வேறு பணியிடங்களில் விதிமுறைகளின்படி ஆதி திராவிடர், பழங்குடியினர் பங்கேற்பு / நியமனம் 19ரூ (18ரூ + 1ரூ) இருக்க வேண்டும். எனினும் பல்வேறு பணித் தொகுதிகளில் ஆதி திராவிடர் பழங்குடியினர் பங்கேற்பு விதிக்கப்பட்ட விழுக்காட்டை எட்டவில்லை என்ற மன நிறைவற்ற நிலையை அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஆகவே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்கள் முறையாக நிரப்பப்படுவதைக் கண்காணிப்பதற்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாது உள்ள பணியிடங்களை ஒரு கால வரையறைக்குள் நரப்பப்படுவதற்குரிய வழிமுறைகளைக் காண்பதற்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் தலைமையில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கொண்ட குழுவை அமைப்பது பற்றி அரசு ஆய்வு செய்து அவ்வாறே அமைக்க முடிவு செய்துள்ளது.

2. அவ்வாறே, கீழே கூறியவாறு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநில ஆதி திராவிடர், பழங்குடியினர் இடஒதுக்கீட்டுக் கண்காணிப்புக் குழு ஒன்றினை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

1. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் .. தலைவர்
2. திரு செங்கை சிவம், சட்டமன்ற உறுப்பினர், பெரம்பூர் தொகுதி .. உறுப்பினர்
3. திரு எல்.அழகுவேலு, சட்டமன்ற உறுப்பினர், கண்டமங்கலம் தொகுதி .. உறுப்பினர்
4. திருமதி கோமதி சீனிவாசன், சட்டமன்ற உறுப்பினர், வலங்கைமான் தொகுதி .. உறுப்பினர்
5. திரு வி.பி.இராஜன், சட்டமன்ற உறுப்பினர், ராஜபாளையம் தொகுதி .. உறுப்பினர்
6. திரு எஸ்.புரட்சிமணி, சட்டமன்ற உறுப்பினர், மங்களூர் தொகுதி .. உறுப்பினர்
7. திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள், சட்டமன்ற உறுப்பினர், நிலக்கோட்டை தொகுதி.. உறுப்பினர்
8. திரு ஜி.பழனிச்சாமி, சட்டமன்ற உறுப்பினர், திருத்துறைப்பூண்டி தொகுதி .. உறுப்பினர்
9. திரு சொ.கருப்புசாமி, சட்டமன்ற உறுப்பினர், சங்கரன் கோயில் தொகுதி .. உறுப்பினர்
10. திரு டாக்டர் கே.கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர், ஒட்டப்பிடாரம் தொகுதி.. உறுப்பினர்
11. அரசு செயலர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை .. செயல் உறுப்பினர்

இக்குழுவில் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அரசுச் செயலரும் உறுப்பினராக இருப்பார்.

3. குறுகிய காலத்தில் அனைத்துத் துறைகளையும் ஆய்வு செய்ய ஏதுவாக மூன்று பேர் அடங்கிய மூனூறு துணைக் குழுக்களை குழுவின் தலைவர் அமைத்துக் கொள்ளலாகும். அரசுத்துறை, மாநில அரசு சார் பொது நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அனைத்துக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கான இட ஒதுக்கீடு, அதன்படியான நியமனங்கள், நியமனங்களில் காணப்படும் பின்னடைவுகள் ஆகியன பற்றி குழு ஆய்வுகளை மேற்கொண்டு கண்காணிப்பு செய்யும். ஒரு கால வரையறைக்குள் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்குரிய வழிமுறைகளையும் குழு அரசுக்கு எடுத்துரைக்கும்.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகள் செய்து வரும் நியமனத் தேர்வுகளிலும் ஒதுக்கீட்டு விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவது இக்குழு கூர்ந்தாய்வு செய்யும். ழு அரசுச் செயலர்கள், பொது நிறுவன முதன்மை நிருவாக அதிகாரிகள் / தலைவர்கள் / மேலாண்மை இயக்குநர்கள், பல்கலைக் கழக துணை வேந்தர்கள், பதிவாளர்கள் ஆகியோருடன் தக்க ஆய்வுகளை மேற்கொள்ளலாகும்.

5. இம் மாநிலக் குழு ஒரு முதல்நிலைக் குழுவாகச் செயல்படும். இக்குழு உறுப்பினர்களுக்கு அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் விதிக்குட்பட்டு பயணப்படி மற்றும் தினப்படி பெற உரிமை வழங்கப்படுகிறது. உறுப்பினர்களின் பயணப்படி / தினப்படி பட்டியல்களை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை துணைச் செயலாளர் மேலொப்பம் செய்வார்.

6. இச்செலவினம் ‘‘2225, ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 01 ஆதி திராவிடர் நலன் - 001. நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் - 1ம் திட்டத்தில் சேராதது ஏசி தலைமையிடப்பணியாளர்கள் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறை * 05. அலுவலகச் செலவுகள் * 02 ஏனைய சில்லரைச் செலவுகள்’’ என்ற தலைப்பில் பற்றி வைக்க வேண்டும்.

7. இவ்வாணைக்கு அரசாணை (நிலை) எண்.1177, நிதி (படிகள் 1) நாள் 19.9.1973ன்படி நிதித்துறையின் இசைவு தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலாளர்

பெறுநர்

அனைத்து உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் நேரடியாக

1. மாண்புமி அமைச்சர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் மற்றும் கொத்தடிமை ஒழிப்பு, சென்னை-9
2. திரு செங்கை சிவம், சட்டமன்ற உறுப்பினர், பெரம்பூர் தொகுதி
3. திரு எல்.அழகுவேலு, சட்டமன்ற உறுப்பினர், கண்டமங்கலம் தொகுதி
4. திருமதி கோமதி சீனிவாசன், சட்டமன்ற உறுப்பினர், வலங்கைமான் தொகுதி
5. திரு வி.பி.இராஜன், சட்டமன்ற உறுப்பினர், ராஜபாளையம் தொகுதி
6. திரு எஸ்.புரட்சிமணி, சட்டமன்ற உறுப்பினர், மங்களூர் தொகுதி
7. திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள், சட்டமன்ற உறுப்பினர், நிலக்கோட்டை தொகுதி
8. திரு ஜி.பழனிச்சாமி, சட்டமன்ற உறுப்பினர், திருத்துறைப்பூண்டி தொகுதி
9. திரு சொ.கருப்புசாமி, சட்டமன்ற உறுப்பினர், சங்கரன் கோயில் தொகுதி
10. திரு டாக்டர் கே.கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர், ஒட்டப்பிடாரம் தொகுதி
11. அரசு செயலர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9
12. அரசுச் செயலர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை-9 (உறுப்பினர்)
13. அனைத்துத் துறைகளின் அரசுச் செயலாளர்கள்
14. செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை/9
15. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம், சென்னை-5
16. அனைத்துத் துறைத் தலைவர்கள்
17. அனைத்து மாநில அரசு சார் பொது நிறுவனங்களின் முதன்மை நிருவாக அலுவலர்கள்
18. உறுப்பினர், செயலாளர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6
19. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2
20. உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வுக் வாரியம், சென்னை-20
21. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

22. தனி அலுவலர், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள், அண்ணா பட்டு வளாகம் திருவள்ளுவர் சிலை அருகில், சேலம் 636 001

23. அனைத்துப் பல்கலைக் கழகங்களின் பதிவாளர்கள்

24. அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்

25. சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/சென்னை-35/சென்னை-1/79/9

26. மாநிலக் கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-18

27. மாநிலக் கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-6

28. மாநிலக் கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு, சென்னை-35

29. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9

30. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இயக்குநர் அலுவலகம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கான தேசீய கமிஷன், தளம் 2, பிளாக் 5, சாஸ்திரிபவன், சென்னை-6

31. முதலமைச்சரின் சிறப்புச் செயலாளர், சென்னை-9

32. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் மற்றும் கொத்தடிமை ஒழிப்பு அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9

33. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9

34. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்(அநமு பிரிவு) சென்னை-9

35. அனைத்து செயலகத் துறைகள்

36. நிதித்துறை (சமூகநலம்), சென்னை-9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்